ORIGINAL ARTICLE

# தமிழர்களின் திருவிழாக்கள் [TAMIḺARKAḶIṈ TIRUVIḺĀKKAḶ]

## FESTIVALS OF TAMILS

**க. ஞானஜோதி / K. Gnanajothi *[1]**

[1] Principal, National College of Arts and Science, Tindivanam, India.
Email: gnanajothisaravanan@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/140

**Abstract**

This study is about the traditional culture followed by people in festivals, the happiness that they experienced and the humanity that they developed. According to our ancestor's festival is not only an expensive or a decorative thing, it's about the social and personal ethics. The prefix 'thiru' was given in order to add respect to the celebration. They framed many biological values like contribution, humanity, spreading love, social well-being, sharing food, happiness, and showing love towards nature. They believed that one who love nature, is the one who can live with humanity, so they started to worship the mother nature as their god and goddess. Thiruvizha acts as a spiritual bridge which connects human and god. This study speaks about many different celebrations which is celebrated in the name festival.

**Keywords:** Tamils, Festival, Humanity, Values, Religion, Society, Nature

**ஆய்வுச் சாரம்**

இந்த ஆய்வானது இலக்கியங்களில் திருவிழாக்கள் எவ்விதம் பார்க்கப்பட்டது என்றும், அன்று முதல் இன்று வரை திருவிழாக்களை எப்படி மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர் என்பது பற்றியும் கூறுவதோடு மட்டுமில்லாமல் தமிழர்களின் திருவிழாக்கள் மனிதநேய விழுமியங்களை எவ்விதம் மக்களிடையே வளர்த்தது என்பது பற்றியும் அமைகிறது. விழாக்களை வெறும் ஆடம்பரமாகவோ அல்லது அலங்காரமாகவோ பார்க்காமல்; நமது முன்னோர்கள் திருவிழாக்களை சமயமாகவும்,சமுதாயமாகவும், இல்லற அறமாகவும் பார்த்தனர். மேலும் திருவிழாக்களானது மக்களின் மனங்களை பண்படுத்தும் வாழ்வியல் விழுமியமாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. 'திரு' என்று அடைமொழி கொடுத்து மேன்மையுடன் அழைத்தனர். விழாக்களில் நமது முன்னோர்களும், சான்றோர்களும் கொடை, மனிதநேயம், அன்பு, பரிமாற்றம், சுற்றம் பேணல், பகுத்துண்ணல், மகிழ்ச்சி, இயற்கையை நேசித்தல் என்று வாழும் முறைகளை அமைத்துக் கொடுத்தனர். இயற்கையை நேசிக்கும் ஒருவனால் தான் மனிதநேயத்துடன் வாழமுடியும் என்பதால் இயற்கையை கடவுளாக வணங்கும் முறையை

கொண்டு வந்தனர். தனி மனிதனின் விழாவாக பார்க்காமல் மன்னர்களின் பிறந்த நாள் விழாவையும் சமுதாய நோக்கத்துடன் பார்த்தனர். மனிதனையும் இறைவனையும் இணைக்கும் ஆன்மீக பாலமாக திருவிழாக்கள் அமைந்தன. இயற்கையை மட்டுமின்றி தனிமனிதன் சார்ந்த விழாக்கள், குடும்ப விழாக்கள் என்றும் நட்சத்திரங்களை வணங்குதல், ஆற்று நீர் விழா மலர்தூவி மகிழ்தல், ஓணம் விழா, திருவாதிரை விழா, கார்த்திகை தீபத் திருவிழா, பொங்கல் விழா என்று மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த விழாக்களைப் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் அதன் மாற்றம் பற்றியும் இக்கட்டுரை ஆய்கிறது.

**கருச்சொற்கள்:** தமிழர்கள், திருவிழாக்கள், மனிதநேயம், விழுமியங்கள், அலங்காரம், சமயம், சமுதாயம், இயற்கை

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 2nd March 2021, revised 26th March 2021, accepted 15th April 2021

## முன்னுரை

விழாக்கள் மனித சமுதாயத்தின் நம்பிக்கை காரணமாகவே தோன்றியிருக்கின்றன. விழாக்கள் என்பதற்குத்தான் எத்தனை சிறப்புகள் உள்ளன.'திரு' என்று மேன்மையுடன் நாம் விழாக்களைத்தான் அழைக்கின்றோம். திருவிழாக்கள் என்பவை தமிழர்களின் வாழ்வியலாகும். அதில் சமூகம், திருமணம், வழிபாடு, சடங்குகள், நம்பிக்கைகள் என ஒன்றோடொன்று இணைந்து சென்றே திருவிழா எனும் தேராக வலம் வருகிறது.

> 'மனிதனை மகிழ்வித்து, தொலைந்து போன உறவுகளை இணைத்து,
> மண் வாசனையை மீட்டெடுத்து, மனித மனங்களில் சிம்மாசனம் போட்டு வீற்றிருப்பது திருவிழாக்களாகும். இன்பத்தின் ஊற்றாய், மகிழ்வின் எல்லையாய்,வாழ்வின் விழுமியமாய், அலங்காரத் தோரணமாய், சமூகத்தின் ஆணிவேராய், பழக்க வழக்கங்களின் இருப்பிடமாய், இளைய சமுதாயத்திற்கு நம் கலாச்சாரத்தை
> பிரதிப- க்கும் இணையமாய், அழைத்தல், உபசரித்தல், விருந்தோம்பல், கொடுத்து மகிழ்தல்' (Gnanajothi, 2018)[1]

என நேர்மறை விழுமியங்களை மனதில் வளர்த்து புத்துணர்ச்சி தரும் இவ்வகை திருவிழாக்கள் என்றென்றும் நம்முடன் பயணித்துக் கொண்டே இருக்கும். அவ்விழாக்களின் சிறப்புகளையும், தமிழர்கள் எவ்வகையில் எல்லாம் என்னென்ன விழாக்களை எவ்விதம் வளர்த்தெடுத்து கொண்டாடி மகிழ்ந்து; தலைமுறைகளுக்கு வித்திட்டு சென்றுள்ளார்கள் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கருத்துரை:

இல்லறத்தை மட்டுமின்றி திருவிழாக்களையும் நல்லறமாக மாற்றி அதனையும் பயனடையும் வகையில் படைத்தளித்த நம் முன்னோர்களின் வழிநின்று தமிழர்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பேணிக் காப்பது நமது கடமை மட்டுமல்ல, வருங்கால தலைமுறைகளின் கடமையாகும். அடுத்த தலைமுறைகளுக்கு கடத்தும் இன்றைய மக்கள் செயல்படாவிட்டால்,

நமது அரிய கலைக் களஞ்சியத்தை நாம் இழந்து விடுவோம். பாரம்பரியத்தை காப்போம்; தமிழன் என்ற அடையாளத்தோடு வாழ்வோம்.

**விழாக்கள்:**

பொதுவாக மக்களின் துன்பத்தை மறக்கச் செய்து இன்பத்துடன் ஒன்றுபடுத்தி வைப்பது விழாக்களாகும். இவ்விழாக்கள் மனித மனங்களுக்கு புத்துணர்ச்சியைத் தருவனவாகும். அத்துடன் ஒரு சமுதாயம் மலர்ச்சி அடைய அடிப்படைக் காரணமாக விளங்குவன விழாக்களாகும். அதனால் தான் வரலாற்று ஆசிரியர்கள் மக்களிடையே நின்று நிலவிய விழாக்களைக் கொண்டே ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினை அடையாளம் காணமுடியும் என்கின்றனர். இது பற்றிக் கலைக்களஞ்சியம்; விழாக்கள் அறிவூட்டுவனவாயும் சமுதாயம் மற்றும் சமயம் சார்ந்த தன்மைகளை உள்ளடக்கியதாகவும் கருதப்படுகின்றன என்று கூறுகிறது.

**விழாக்களின் வகைகள்:**

சங்ககாலத் தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் கிடைக்கின்றன. அவற்றுள் சில சமயத் தொடர்பானவை. வேறு சில சமூகத் தொடர்பானவை. நகரங்கள் சில **'விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்'** என்று பாராட்டப்படுகின்றன. விழாக்களில் ஆடலும், பாடலும் இடம் பெற்றன. பாணர், கூத்தர் முத-ய கலைஞர்கள் விழாக்களில் ஆடியும், பாடியும் மக்களை மகிழ்வித்தனர். சங்க காலத்தில் விழாக்களைச் சமுதாய விழா, சமய விழா என்று இரு வகையாகப் பகுக்கலாம். இதில் சமுதாய விழா என்பது மன்னின் பிறந்த நாள் விழாவாகும்.

**பிறந்த நாள் விழா:**

சங்க காலத்து மன்னர்களின் பிறந்த நாளை விழாவாகப் பொதுமக்கள் கொண்டாடியுள்ளது மக்களுக்கும், மன்னனுக்கும் இருந்த நெருங்கிய உறவு நிலையை வெளிப்படுத்துகிறது. நன்னனது பிறந்த நாளை மக்கள் கொண்டாடியதை மதுரைக் காஞ்சி,

> மன்னு தொறும் நின்ற குரவை சேரிதோறும்
> உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ
> வேறு வேறு கம்பலை வெளிகொள்பு மயங்கிப்
> பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்
> சேரி விழவின் ஆர்ப் பெழுந் தாங்கு (மதுரைக் காஞ்சி, 615-619)

என்ற பாடல் வரிகளால் புலப்படுகின்றது. இப்பிறந்த நாள் விழாவை 'வெள்ளணி விழா' என்று அழைப்பர். வெள்ளணி நாள் குறித்து நச்சினார்க்கினியர்,

> **'**மங்கல வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து அவ்வுயிர்க் கண்ணும் அருளே நிகழ்த-ன் அதனை வெள்ளணி என்க**'** என்று பொருள் கூறுகிறார்**.** (Dhatchanamurthy, 2019)[2]

வெள்ளை நிற ஆடை அணிவது மங்கலம் குறிப்பதாக எண்ணியதால் இவ்வாறு செய்தனர்.

இதனையே சிலப்பதிகாரம்,

வெள்ளணி விழா என்பது மன்னனின் முடிசூட்டு விழாவாகவும்
சிறந்த கீர்த்தி மண்ணு மங்கலம் என்பது மன்னின் பிறந்த நாள்
விழாவாகவும் இவ்விழா நாளில் சிறையிருந்தோர் விடுதலை
செய்யப்பட்டமையைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

இவ்விழா நடைமுறைகள் தற்காலத்திலும் நாட்டிற்காக உழைத்த தலைவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவதும் அவ்வேளைகளில் சிறைக் கைதிகளுக்கு உணவளிப்பதும் அவர்களை விடுதலை செய்வதையும் காணமுடிகிறது.

**சமய விழாக்கள்:**

சங்க காலத் தமிழர்கள் கொண்டாடிய சமய விழாக்களில் குறிப்பிடத்தகுந்தது கார்த்திகை திருவிழாவாகும். கார்த்திகை விண்மீனை அறுமீன் என்று நற்றிணைச் செய்யுள் ஒன்று குறிக்கின்றது. அஃது அறஞ் செய்யத்தக்க சிறப்புடையது. எனவே கார்த்திகைத் திங்களை,

அறஞ்செய் திங்கள் என்று குறிப்பிடுகின்றது - (நற்றிணை. 202)

வீடுகளும் தெருக்களும் தீப மேற்றி ஒளி விளக்குகளால் அழகுறுத்தப் பெற்றமையை அகநானூறு பாடலொன்று குறிப்பிடுகின்றது. தற்போது காத்திகை தீப திருநாளாக இவ்விழா; மக்களிடையே கொண்டாடப்பட்டு வருகிறது.

மழைகால் நீங்கிய மாசு விசும்பின்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அக-ருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயா' (அகம்:141)

என்ற பாடல் வரிகளால் விளங்குகின்றன. இலவ மரத்தில் நெருக்கமாக மலர்ந்துள்ள பூக்கள் பெரு விழாவில் ஏற்றப்பட்ட விளக்குப் போல் தோன்றியதாக இன்னொரு செய்யுள் பேசுகின்றது,

அருவி யான்ற உயர்சிமை மருங்கில்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில் மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலையிறந் தோரே' (அகம். 185)

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் விழாக்களின் இனிமையை பேசுகின்றது.

**இந்திர விழா:**

மருத நிலக் கடவுளான இந்திரனுக்காகச் செய்யப்படும் விழா இந்திர விழாவாகும். சங்க காலத்தில் இவ்விழாவை மக்கள் கொண்டாடிய செய்தியினை ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்றின் மூலமே அறிய முடிகின்றது.

இந்திர விழவிற் பூவி னன்ன
புன்றலைப் பேடை வரிநிழ லகவும் (ஐங். 62)

இவ்வொரு பாடல் தவிர வேறு சான்று ஏதும் கிட்டவில்லை. இவ்விழாவை மிக விரிவாக மக்கள் கொண்டாடியதைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது. மணிமேகலை காலத்தில் இந்திரவிழா அரசாங்க விழாவாகவே கொண்டாடப்பட்டது. **தூங்கெயிருந்த தொடித்தோட் செம்பியன்'** இதனைத் தொடங்கினான் என்று அறிகின்றோம். இவ்விழா புகாரோடு தொடர்புடையதாக இருந்தாலும் மதுரையிலும் கொண்டாடப்பட்டதாக **சின்னமனூரார்ச்' செப்பேட்டாலறிகின்றோம்.**

### பங்குனி விழா: (பங்குனி உத்திர விழா)

பங்குனித் திங்கள் உத்தரமும், நிறைமதியுங் கூடிய நன்னாளில் உறையூர் குறுங்காட்டில் உள்ள சோலையில் மக்கள் கூடியிருந்து விழாக் கொண்டாடியதை,

பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள் -(அகம். 137)

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகள் விழாக்களின் இனிமையை பேசுகின்றது.

### தைநீராடு விழா: (பொங்கல் விழா)

இது தைத்திங்களில் கொண்டாடப்படும் விழாவாகும். முதற் கண் அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின்னர் வளத்தைக் குறித்த விழாவாக மாறியது. ஆனால் பொங்கல் விழாவினைப் பற்றிய விவரம் கிடைக்கவில்லை. தைத்திங்களில் நோன்பு நோற்பதுண்டு என்று அறிகின்றோம். தைத்திங்களில் நோன்பு இருப்பர் அமர்ந்திருப்பது போல் குரங்குகள் மழையில் நனைந்து அமர்ந்திருப்பதாக நற்றிணைச் செய்யுள் குறிப்பிடுகிறது.

வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
தையூண் இருக்கையில் தோன்றும் நாடன்' -நற். 22

சங்க காலத்தில் திருமணமாகாத மகளிர் தமக்கு ஏற்ற சிறந்த கணவர் கிடைத்தற் பொருட்டு மார்கழி மாதத்தில் நோன்பிருந்து நீராடி வணங்குவர். இதனை,

தை இத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் - நற்.80: 7-9)

என்று நற்றிணைப் பாடலும், தைத்திங்களில் மகளிர் ஆறு குளங்களில் நீராடுவது சில செய்யுட்களில் குறிக்கப்படுகின்றது. பின்னால் இதனையே மார்கழி நீராட்டு என்றனர்

தையில் நீராடிய தவந்தலைப் படுவாளோ' -(க-த்.59:13)

என்ற க- த்தொகைப் பாடலும், மகளிர் கூட்டமாக நீராடுவர் என்பதை,

நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் -(ஐங்.84:3-4)

என்ற பாடல்கள் மூலம் இத் தைந்நீராடலும் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களைப் பாடி வணங்கும் செயலும் சங்க காலத்து மகளிர் செயல்களின் தொடர்ச்சியாக விளங்குவதை அறிய முடிகிறது.

### ஓணம் விழா: (திருவோணம்)

திருமாலோடு தொடர்புடைய விண்மீன் திருவோணமாகும். இந்நாளில் கொண்டாடிய விழா ஓணவிழாவாகும். இதனை,

கணங்கொளட அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள்' - (மதுரை .590-591)

என்று மதுரைக் காஞ்சி வரிகள் மூதூர் நகரத்து மக்கள் கொண்டாடியதைச் சுட்டுகின்றன. இவ்விழாவை இன்றளவும் கேரளாவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இந்த நாளில் வீரர்கள் நீலக்கச்சை அணிந்து விருந்துண்டு களித்தனர். இவ்விழா ஆவணித் திங்களில் கொண்டாடப்பட்டது.

கிபி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆழ்வார்கள் இதுபற்றிக் குறிப்பிடுகின்றனர்.
கிபி. 9 ஆம் நூற்றாண்டில் ஆண்ட தாணுரவியின் கல்வெட்டில்
இது பற்றிக் குறிப்புண்டு
கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சைவம் புத்துயிர்
பெற்றபோது ஆதிரை நாள் சிறப்பிடம் பெறுவதாயிற்று. (Sakthivel, 1990)[3]

**நீராடல் விழா:**

நெய்தல் நிலத்து மக்களாகிய பரதவர்கள் புனித நீராடினால் தாங்கள் செய்த பாவங்கள் நீங்கும் என்று நம்பி சிறைச் சுறவின் கோடுநட்டு வணங்கிப் பின் காவிரி கடலோடு கலக்குமிடத்தில்,

தேறுநீர்ப் புணரியோடு யாறுதலை மணக்கும்
ம-யோதத் தொ- கூடற
தீதுநீங்கக் கடவாடியும்
மாசுபோகப் புனல்படிந்து (பட்டி. 97-100)

என்று நீராடியதை கடியலூர் உருத்திரங்கண்ணினார் பட்டினப்பாலையில் விவரிக்கின்றார். வையையில் நீராடச் சென்ற மதுரை நகரத்து மக்கள் நீர் வளம் பெருக வேண்டி நத்தை நண்டு இறவு வாளைமீன் என்பனவற்றை நீரிட்டு நாடு விளைவதாக உலகம் பொ- வதாக என்று வாழ்த்தியதை,

நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை
வித்தி யலையில் விளைக பொ- கென்பார் (பரி.10:85-86)

என்று பரிபாடல் சுட்டுகின்றது. சிலப்பதிகாரத்து ஆற்றுவரிப்பாடல்கள்' வெள்ளத்தைக் கண்டு மக்கள் மகிழ்ந்து கொண்டாடியதைத் தெரிவிக்கும். Subramanian.N. (1998)[4] இவ்வாறு பாவங்களைப் போக்கவும், வளம் வேண்டியும் மக்கள் புனித நீராடும் பழக்கம் இன்றும் மக்களிடையே இருந்து வருவதைக்
காணலாம்.

**திருவாதிரை விழா:**

திருவாதிரை நிறைமதி நாளில் ஆகமங்களைப் பயின்ற அந்தணர்கள் சிவபெருமானுக்கு விழாத் தொடங்கி நடத்தியதை.

ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க (பரி.11:76-78)

என்ற பாடல் சுட்டுகின்றது.

**காமன் விழா: (இளவேனில் விழா)**

சங்க காலத்தில் இவ்விழாவை வேனிற் காலத்தில் நிகழ்த்தினர் ஆடவரும் பெண்டிரும் இன்பப் பொழுது போக்கு விழாவாகக் கொண்டனர். இக்காமனை மன்மதன் காமவேள் வேண்வாள் என்று அழைத்தனர். இளவேனில் காலம் காமவேளுக்குரியதாகக் கொள்ளப்படும். வில்லவன் விழாவென்பது காமனை வேண்டிச் செய்யும் விழாவாகும். இவ்விழாக் காலத்தில் பரத்தையருடன் கூடியாடியதை,

உற-யாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்
விற-ழை யவரோடு விளையொடு வான் மன்னோ (-0.30:13–14)

என்றும் இளவேனிற் காலத்தில் விழா எடுத்து மகிழ்ந்ததை,

இருங்குயி லாகப் பெருந்துறை கவின்பெறக்
குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்
சீரார் செவ்வியும் வந்தன்று (4- $.36:8-10)

என்றும் க- த்தொகைப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. காமன் காதற்கடவுளாகப் போற்றப்படுதலைப் பரிபாட- ல் (18:28) காணலாம். இவ்விழா இற்றை நாளிலும் வேனிற் காலத்து நிகழ்த்தப் பெறுவதைக் காணமுடிகிறது. இவைபோன்று,

**புறநானூற்றில் (33:23-22)** சோற்றை உருண்டைகளாக்கி தயிரோடு பிசைந்து வருவோர் அனைவருக்கும் கொடுத்து மகிழ்ந்ததை சிறுசோற்று விழாவென்றும்,

**பரிபாட-ல் (பரி.19) -** முருகப் பெருமான் வள்ளியை மணந்துக் கொண்டதை மணவிழாவாகக் கொண்டாடிதை திருப்பரங்குன்றத்து விழாவென்றும்,

**அகநானூற்றில் (61)** நெடியோன் குன்றாகிய திருவேங்கடம் திருமா-ன் நின்ற கோலத்து சிறப்பை திருப்பதி விழாவென்றும்,

**அகநானூற்றில் (368)** கொங்கர்கள் இடுப்பைச் சுற்றிலும் மணியைக் கட்டிக் கொண்டு தெருவில் ஆடியதை உள்ளி விழாவென்றும்,

**அகநானூற்றில் (352)** ஆடும் கலைஞர்கள் கோடியர்கள் எனப்பட்டனர். விற- யர்கள் மயில் போல அசைந்தாடும் தோறும் கூத்தர்கள் முழவினை முழங்கிக் கொண்டு பின்னே செல்வதை கோடியர் விழாவென்றும்,

**திருமுருகாற்றுப்படையில்** முருகனுக்காக எடுக்கப்பட்ட வெறியாட்டு விழாப் பற்றிய முழு விவரமும் இடம்பெறுகின்றது. ஊர்தோறும் இவ்விழா கொண்டாடியதை இந்நூ-ன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**விழாவின் பயன்கள்:**

விழாக்கள் என்பது ஒற்றுமை, இன்பம், மகிழ்ச்சி, விருந்தோம்பல், சுற்றம் பேணல், பகுத்துண்ணல், பண்பாட்டின் அடையாளம், தமிழர்களின் கலாச்சாரம் என்ற பல விழுமியங்கள் அமைவதற்கு காரணமாக இருக்கின்றன. எனவே விழாக்கள் என்பது சமய விழுமியமாகவே அமைகிறது.

விழவு மேம்பட்ட பழவிறல் மூதுர் (பெரும். 411)

என்ற பாடலடி எல்லாச் சமயத்தவரும் தொழும்படி எடுத்த விழா என்பதை சொல்வதன் மூலம் அனைவரும் எவ்வித பாகுபாடும் இன்றி இறைவனை வணங்க வேண்டும் என்றும் இறைவன் முன் அனைவரும் சமம் என்ற ஒற்றுமை உணர்வினை ஏற்படுத்துகிறது. அனைவரும் ஒருங்குக் கூடி நீராடி மகிழ்ந்தனர் என்பதை,

வலஞ்சுழி யுந்திய திணைபுரி புதல்வர்

கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇத்
தத்தந் துணையோ டொருங்குட னாடும் (பரி.16:7-9)

என்ற பரிபாடலும்,

கற்றாருங் கல்லா தவரும் கயவரும்
பெற்றாரும் பெற்றாற் பிழையாத பெண்டிரும்
பொற்றேரான் றானும் பொம்புரிசைக் கூடலும்
முற்றின்று வையைத் துறை (பரி திரட்டு.இரண்டு.24-27)

என்ற இலக்கியப் பாடல்கள் விளக்குகின்றன.

திருவிழாக்கள் மகிழ்ச்சிக்காக மட்டுமின்றி பண்பாட்டுப் பரிமாற்றங்கள் நிகழவும் உறுதுணையாக உள்ளன, சமூக ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன. என்பார் சக்திவேல் சமய நம்பிக்கை என்பது பெரும்பான்மையும் விழாக்களின் அடிப்படையிலேயே அமைகிறது என்பார் பக்தவத்சல பாரதி (Bakthavachala Barathi, 1998)[5].

## இறைவழிபாடு

விழாக்கள் இறைவழிபாட்டுச் சிந்தனையை மனிதன் மனதில் ஆழமாக விதைப்பதற்கும் இறைவன் மேல் மக்கள் கொண்ட ஆழமான அன்பை வெளிக்காட்டவும் திகழ்கின்றன. விழாக்கள் மக்கள் சமூகத்தை ஒருங்கிணைக்கும் நிகழ்வுகளாக நடைபெறுகின்றன. விழாக்கள் இறைவனோடு மனித இனத்துக்கு உள்ள இணைப்பை விளக்குவதாக அமைகிறது.

தனி மனிதனுக்கும் தெய்வத்துக்கும் தொடர்பு மிகுதியாகவே ஏற்பட்டுவிடவே அதனை இணைக்கும் பாலமாக திருவிழாக்கள் அமைகிறது. இதனால் மனிதன் செய்யும் குற்றச் சம்பவங்கள் குறைந்து அச்ச உணர்வினை ஏற்படுத்தும் என்று விளக்கம் கூறுவார். வையாபுரிப் பிள்ளை (Vaiyapuripillai, 1978)[6].

மேற்கண்ட விழாக்கள் மகிழ்ச்சிக்காக மட்டுமின்றி அறம் போதிப்பனவாக உள்ளன. அதனால் தான் இல்லறத்தை நல்லறம் என்றான் தமிழன். இக்கருத்திற்கு ஏற்றாற்போல் மாதையன் அவர்களும், குடும்பம் எனும் அமைப்பில் உள்ள பெண்களால் தான் இன்று வரை எத்தகைய விழாக்களாக இருந்தாலும் அவை தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகின்றன என்பார். (Mathaiyan, 1998)[7].

ஆணவம், கன்மம், மாயை என்னம் மும்மலங்களையும் களைந்து நல்வாழ்வு வாழ்ந்து இறைவனை அடையும் தத்துவத்தை விழாக்களில் காணமுடிகிறது. Rasarathinam.K.(2000)[8] இன்பத்தையும் ஒற்றுமையுைம் பண்பாட்டையும் பேணிக்காக்கும் திருவிழாக்கள் வாழ்வியல் விழுமியங்களாக என்றும் நம்மிடம் நீங்கா இடம் பிடித்துள்ளது என்பதில் ஐயமில்லை. திருவிழாக்கள் அன்றி-ருந்து இன்றுவரை காணின் பல்வேறு மாற்றங்களை பெற்றிருந்தாலும் இன்று வரை புது பொ- வுடன் மக்களிடம் வாழ்ந்துக் கொண்டுதான் இருக்கின்றன.

**முடிவுரை**

தாம் வாழ்கின்ற மண்ணில் காலூன்றிக் கொண்டே விண்ணை எட்ட முயன்ற வாழ்க்கை வாழ்ந்தவர்கள் தான் சங்ககாலப் பொது மக்கள் என்பதற்கு அவர்களின் சமயக் கொள்கையும் அவர்கள் வழிபாட்டுத் தெய்வங்களுக்கு எடுத்த விழாக்களும் கடவுட் கொள்கையுமே சான்றாகும் என்பார் முனைவர் கு. இராசரெத்தினம்.

நம்பிக்கைகள் சில இன்றைய நோக்கில் பொருந்தாதனவாகத் தோன்றினும், இவை யாவும் அவர்களது வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ளவும், உயரிய நெறிகளைப் பின்வரும் மக்கட் சமுதாயத்திற்கு அறிவுறுத்தும் வகையிலும் அமைந்திருப்பதை உணரலாம். பண்படுவது பண்பாடு பண்படுதல் சீர்படுதல் என்பதாகும்.

திருந்திய தமிழை பண்பட்ட செந்தமிழ் என்றும் அத்தகைய பண்பட்டதை நாகரிகம் என்றும் குறித்தனர். அத்தகைய நாகரிகம் உருவாக அடித்தளமாய் அமைவது நம்பிக்கை எனும் விழாக்களாகும் என்பார் தேவநேயப் பாவாணர். சமுதாய மறுமலர்ச்சிக்கு மட்டுமில்லாமல் நாகரிக மேம்பாட்டிற்கும் திருவிழாக்கள் அடிப்படையாக அமைந்ததை அறிய முடிகிறது. முன்தோன்றி மூத்த மொழியாம் தமிழ்மொழி சங்ககாலம் தொட்டு முச்சங்கம் கண்டு இலக்கண இலக்கியக்கியங்களை படைத்து பக்தி இலக்கியத்தில் திளைத்து இன்று வரை நவீன வளர்ச்சிக் கண்டுள்ளது.

சிற்றிலக்கியங்கள் முதல் காப்பியங்கள் வரை போற்றப்படாத தெய்வங்களும் இல்லை கொண்டாடப்படாத விழாக்களும் இல்லை என்பார் முனைவர் சு. ஆனந்தன் (Aanandhan 2012)[9].

இலக்கியங்களைக் கொண்டு இக்காலப் பொதுமக்களின் நம்பிக்ன்ப்ப்ள், பழக்க வழக்கங்கள், விழாக்கள் ஆகியவற்றை அறிய முடிகிறது. அத்துடன் அவர்களது நம்பிக்கைகளில் பல இன்றும் மக்களிடையே வழங்கி வருவது அவற்றின் சிறப்பாகும். அவர்களது நம்பிக்கைகளில் சில இன்றைய நோக்கில் பொருந்தாதனவாகத் தோன்றினும், இவை யாவும் அவர்களது வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ளவும் உயரிய நெறிகளைப் பின்வரும் மக்கட் சமுதாயத்திற்கு அறிவுறுத்தும் வகையிலும் அமைந்திருப்பதை உணர முடிகிறது.

**மேற்கோள் நூல்கள்:**

1. Gnanajothi, G. (2018). *Values of sangam literature*, University of Madras, Ph.D., Research Thesis.Madras, India.
2. Dhatchanamurthy, A. (2019). *Tamizhar Nagareegamum Panbadum [Culture and Civilaization of Tamil]* Yazhal publishing, AP 1108, Thenral Residence 3rd street, West Anna nagar, Chennai.
3. Sakthivel. (1990). *Nattuppura iyal Aayvu [Folklore Research*]. Chennai: Nattuppura Iyal AAivu, Meiyappan Publication.
4. Subramanian. (1998). *Sangakala vazhalviyal [Earlier civilization]*. Chennai: New Century Book House.
5. Bakthavachala Barathi. (1998). *Panbattu manidaveyal [Cultural values in human]*. Cithambaram, India: Meiyappan Pathippagam.

6. Vaiyapuripillai. (1978). *Tamizhar Panbadu [Tamil Culture]*. ChennaI: Paari Nelaiyam.
7. Mathaiyan. (1998). *Sanga illakkiyathil Kudumabam [Family life in Earlier Tamil]*. Chennai: New Century Book House.
8. Rasarathinam. (2000). *Sanga illakkiyathil pothumakkal [Common People in Sangam Literature]*. Chennai: Naam Thamizhar Pathippagam.
9. Aanandhan. (2012). *Tamil illakkiya Varalaru [History of Tamil Literature]*. Chennai: Kanmani Publication.